கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அ.வ.எண். 142/2023

வாதி தரப்பு சாட்சி சுரேந்தர் என்பவரின் வாக்குமூலம் ( 1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேந்தர் | சாதி | : | |
| தகப்பனார் பெயர் | : | ராஜேந்திரன் | சமயம் | : | இந்து |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | கிளை மேலாளர் |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 32 |

நாள் : 12.03.2025

வா.சா. 1 சுரேந்தர்

முதல் விசாரணை :–

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மகளிர் சுய உதவி குழு அடையாள அட்டை **வா.சா.ஆ 1.** 2 முதல் 13 பிரதிவாதிகளின் முகவரிகளை காட்டும் ஆவணங்கள் **வா.சா.ஆ 2.** எனது வங்கியில் இருந்து நேதாஜி மகளிர் மன்றத்திற்கு வழங்கிய கடன் அனுமதி சீட்டு **வா.சா.ஆ 3.** மகளிர் மன்றம் வங்கிக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை **வா.சா.ஆ 4.** பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த இடை ஒப்பந்தம் **வா.சா.ஆ 5**. நேதாஜி மகளிர் மன்றத்தின் சேமிப்பு கணக்கிற்கு கடன் தொகையை வினியோகம் செய்ய பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடிதம் **வா.சா.ஆ 6.** மகளிர் மன்ற தலைவி மற்றும் செயலாளர் , பிரதிநிதி ஆகியோர் கையொப்பம் செய்த கடன் உறுதி சீட்டு **வா.சா.ஆ 7.** 13.05.2014 ம் தேதி 2 முதல் 4 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த ஒப்புகை சீட்டு **வா.சா.ஆ 8.** ஒப்புதல் சீட்டு எழுதிக்கொடுக்க கால தாமதம் ஆனதற்கு 2 முதல் 13 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த 13.06.2017 ம் தேதியிட்ட கடிதம் **வா.சா.ஆ 9.** 13.06.2017 ம் தேதியிட்ட ஒப்புகை சீட்டு **வா.சா.ஆ 10.** 10.06.2020 ம் தேதியிட்ட ஒப்புகை சீட்டு **வா.சா.ஆ 11.** பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பு நகல்கள் 12 வரிசை **வா.சா.ஆ 12**. பிரதிவாதிகளின் கடன் விபரம் **வா.சா.ஆ 13**. பிராது படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.